
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 085 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 30 வெள்ளிக்கிழமை (14.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### 3 இலட்சத்து 70 ஆயிரம்
## கால்நடைகள் வன்னியில் மேய்ச்சல் தரவையின்றி அவதி
### சபையில் ரவிகரன் எம்.பி




(கொழும்பு)

வன்னியில் ஏறக்குறைய 3 இலட்சத்து 70 ஆயிரம் கால்நடைகள் காணப் படுகின்றபோதிலும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவையின்மையால்,

02ஆம் பக்கம் பார்க்க

### வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு
## 35 - 49 நாட்களுக்குள் தேர்தல்
### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான வேட்புமனுக்கள் தாக்கல் செய் யும் நடவடிக்கை நிறைவடைந்த நாளிலிருந்து 35 தொடக்கம் 49 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆணையாளர்

15ஆம் பக்கம் பார்க்க

# அனைவரது உரிமைகளையும் அரசாங்கம் பாதுகாக்கும்
## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

அனைவரது உரிமைகளையும் பாதுகாக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற் படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



(02ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு திருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இன்று ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஆலயத்துக்குச் செல்லவுள்ள பக்தர்களுக்கு இன்று காலை 4 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணம் பேருந்து

15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் சிறை அதிகாரி சுட்டுப் படுகொலை

(காலி)



காலியில் முன்னாள் சிறை அதிகாரி ஒருவர் நேற்று சுட்டுப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

காலி - அக்மீமன, தலகஹப் பகுதியில் நடத்தப்பட்ட துப் பாக்கிச்சூட்டில் காலி பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறைச்

15ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்புக் கோரி
### கிராம சேவகர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

பெண் கிராம சேவையாளர் களின் பாதுகாப்புத் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக் குத் தீர்வு காணும் முகமாக இன்று நள்ளிரவு 12 மணி முதல் தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை கிராமசேவகர்கள்

15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றும் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கட்டுமானமானது மக்களது காணியை அப

15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டின் பொருளாதார கொள்கை என்ன?
### நாமல் எம்.பி கேள்வி



(கொழும்பு)

நாட்டில் தற்போது எவ்வா றான பொருளாதார கொள்கை செயற்படுத்தப்படுகிறது என்

15ஆம் பக்கம் பார்க்க

## தருமபுரத்தில் ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

தருமபுரம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட ஏ35 பிரதான வீதியில் ஐஸ் போதைப்பொரு ளுடன் ஒருவர் நேற்று கைது

15ஆம் பக்கம் பார்க்க

### பெண் வைத்தியர் துஷ்பிரயோகம்
## சந்தேக நபரை 48 மணிநேரம் தடுப்பில் விசாரிக்க உத்தரவு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத் தியர் விடுதியில் கடந்த திங் கட்கிழமை இரவு பெண் வைத் தியர் ஒருவர் பாலியல் துஷ் பிரயோகத்துக்குட்பட்ட சம்ப வம் தொடர்பில் கைது செய் யப்பட்ட பிரதான சந்தேக நபரை 48 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை

15ஆம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பொலிஸ்மா அதிபரை

# கண்டுபிடிக்க முடியாத நிலையில் அநுர அரசு

## சாகல ரத்நாயக்க விமர்சனம்



(கொழும்பு)

**முன்னாள் பொலிஸ்மா அதிபரை கண்டுபிடிக்க முடியாத நிலையில் அநுர அரசு காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

தமது வீடு சோதனையிடப்பட்டமை குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபராகப் பதவியில் அமர்த்துவதற்கு நான் விரும்பவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

அவரைப் பதவியில் அமர்த்துவதனை நான் காலம் தாழ்த்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தற்பொழுது அவர் எனது வீட்டில் மறைந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த அனைத்து விடயங்களும் கதைகளே. பொலிஸ்மா அதிபரைக் கைது செய்ய முடியாமல் இன்று அரசாங்கத்தினர் தடுமாறுகின்றனர்.

தாம் சட்டம் ஒழுங்கு அமைச்சராக கடமை ஆற்றியுள்ளதாகவும் தமக்கும் சட்டம் தெரியும் எனவும் இவ்வாறு இழிவான செயல்களை தாம் எப்பொழுதும் செய்தது கிடையாது எனவும் எனது வீடு சோதனையிடப்பட்டமை அரசியல் நோக்கில் என சந்தேகிப்பதாக சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை தகவல் உறுதிப்படுத்தல் கடிதங்கள் இன்னும் கிடைக்காத பரீட்சார்த்திகளுக்கு இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சிறப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி காலி, குருநாகல், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்கள் 2025.03.15 சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை சம்பந்தப்பட்ட பரீட்சை விண்ணப்பதாரர்களுக்குத் தேசிய அடையாள அட்டையில் உள்ள தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குவதற்காக மட்டுமே திறந்திருக்கும்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான www.drp.gov.lk ஐப் பார்வையிட்டு தொடர்புடைய கடிதத்தை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்கு இன்னும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள் அதிபர் அல்லது கிராம அலுவலரால் சான்றளிக்கப்பட்ட முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைக் கொண்டு வர வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் 2025 (2024) சாதாரண தரப் பரீட்சை மார்ச் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

குடும்பமாக குடியேறுவதற்கு

## மிகவும் பொருத்தமான நாடுகளில் இலங்கை முதலிடம்

(கொழும்பு)

உலகில் குடும்பமாகக் குடியேறுவதற்கு மிகவும் பொருத்தமான 10 நாடுகளில் இலங்கை முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தத் தரவரிசையை உலகின் முன்னணி வணிக இதழான சிஎன் டிராவலர் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

நாட்டின் கலாசாரம், கல்வித்தரம், போக்குவரத்து வசதிகள், வேலை தேடும் திறன், சுகாதார அமைப்பு, பாதுகாப்புச் சூழல் உள்ளிட்டவை இந்தத் தரவரிசைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தரவரிசையின்படி, சுவீடன் மற்றும் நோர்வே நாடுகள் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்துள்ளதாக சிஎன் டிராவலர் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ம-7)

## கால் நடை...

கால்நடைவளர்ப்பாளர்கள் அவதியுறுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை (12) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் கால்நடைகளும், மன்னார் மாவட்டத்தில் ஒரு இலட்சத்தி 40 ஆயிரம் கால்நடைகளும், வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்தி 30 ஆயிரம் கால்நடைகளுமாக, வன்னிப் பகுதியில் மொத்தமாக ஏறக்குறைய மூன்று இலட்சத்தி 70 ஆயிரம் கால்நடைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு பெருமளவான கால்நடைகள் காணப்படுகின்றபோதும் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை இல்லாத சிக்கலான நிலமை காணப்படுகின்றது.

இதனால் கால் நடைகளை வீதிகளின் இருமருங்கிலும் மேயவிட வேண்டிய நிலை காணப்படுவதாக கால் நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேய்ச்சல் தரவையின்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெருத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே இந்த சிக்கல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை நிலங்களை ஒதுக்கிக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ம-7)

## அனைவரது...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனத்துக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டதுடன், அதற்குரிய தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தற்போது இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திற்குள் நுழைந்திருப்பதால், அதன் பரிந்துரைகள் மற்றும் நியதிகளுக்கு அமைவாக அரசாங்கம் செயற்பட வேண்டியிருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தெரிவித்தார்.

அதன்படி வரவு செலவுக் கட்டுப்பாடுகளின் கீழ் முன்னுரிமைகளை அறிந்துகொண்டு இம்முறை பாதீடு தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அதில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதுடன்,

அந்த இக்கட்டான நிலைக்கு மத்தியிலும் அரச ஊழியர்களுக்குப் பெருமளவில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

தொழில்வாண்மையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு நல்லதொரு புரிதல் இருப்பதாகவும், அது தொடர்பில் கவனம் செலுத்தி அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாக்கவும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)

## அநுராதபுர விவகாரம்

# சந்தேகநபரின் சகோதரி உட்பட இருவர் கைது

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் விடுதியில் 32 வயதான பெண் வைத்தியர் ஒருவர் கத்தி முனையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபரின் சகோதரி, மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (12) இரவு கல்னேவ, நிதிகும்பாயாயப் பகுதியில் வைத்து மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மறைந்திருக்க உதவிய குற்றச்சாட்டின் பேரில் அவரது சகோதரி கைது செய்யப்பட்டுள்ளார்.

வைத்தியரைப் பாலியல் பலாத்காரம் செய்ததன் பின்னர் சந்தேக நபரால் திருடப்பட்டதாகக் கூறப்படும் தொலைபேசியை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மற்றொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

37 வயதுடைய சகோதரி மற்றும் 27 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனை

# மாணவர்கள் மத்தியில் அதிகரிப்பு!

## தேசிய அபாயகர ஔடதாங்கள் கட்டுப்பாட்டுச் சபை தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் 15 முதல் 17 வயதுடைய கணிசமான எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும் இளைஞர்களும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகும் போக்கு அதிகரித்து வருவதாக தேசிய அபாயகர ஔடதாங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.**



சட்டவிரோத போதைப் பொருட்களுக்கு மாற்றாக சுமார் 150 வகையான மருந்துகள் பயன்படுத்தப்படுவதால், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் பயன்பாடு அதிகரித்து வருவதாக அந்த சபையின் தலைவர் வைத்திய நிபுணர் இந்திகா வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட ஒரு இலட்சத்து 62,000 பேர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பொன்றில் நாட்டில் 92,000 முதல் ஒரு இலட்சம் பேர் வரை போதைப்பொருட்களுக்கு அடிமைகளாக இருப்பதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை புற்றுநோய் நோயாளர்களுக்கு பரிந்துரைக்கப்படும் வலி நிவாரணிகள் உள்ளிட்ட பல மருந்துகள் போதைக்கு அடிமையானவர்களால் அதிகளவில் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெரியவர்கள் மட்டுமல்லாது 15 முதல் 17 வயதுடைய கணிசமான எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும் இளைஞர்களும் இத்தகைய போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பரத்தைப் புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஸ்ரீ மஹா கணபதி பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமாகி காலை 9 மணி 20 நிமிடம் முதல் 9 மணி 45 நிமிடம் வரையுள்ள சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது என ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சபாரத்தின பரமேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (6-8)

## கும்பாபிஷேகம்

(கரணவாய்)

வடமராட்சி தென்புலோலியூர் உபயகதிர்காம ஆலய தான்தோன்றிய ஸ்ரீ சக்கர சண்முக தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற உள்ளது.

முன்னதாக எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை முதல் கிரியைகள் இடம்பெற்று 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தல் இடம்பெற்று, மறுநாள் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.39 மணிமுதல் 11. 38 மணி வரையான சுப முகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8-60)

## ஊழியர் சேமலாப நிதியம் வழங்காத நிறுவனங்கள் அடையாளம்

### தொழில் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தை உரிய வகையில் வழங்காத 22,450 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (நி-8)

## பாடசாலை கிரிக்கெட் போட்டிகள் விதிகளை மீறினால் சட்டம் பாயும்

(கொழும்பு)

பாடசாலை கிரிக்கெட் போட்டிகளின் போது விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த பொலிஸார் மிகுந்த அவதானத்துடன் இருப்பதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.


தற்போது, நாட்டில் பாடசாலை கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு மீண்டும் ஒரு முறை அறிவுறுத்த வேண்டிய அவசியத்தை நாங்கள் காண்கிறோம்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற துயரமான சம்பவங்களை நாம் அனைவரும் அறிவோம். உயிரிழப்புகள், கடுமையான விபத்துக்கள், வன்முறைச் சம்பவங்கள் போன்ற விடயங்களை குறிப்பிடலாம். இது தொடர்பில் பொலிஸார் அவதானம் செலுத்தி வருகின்றனர்.

போட்டி ஏற்பாட்டாளர்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவில் உள்ள பொலிஸாரை சந்தித்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனூடாக இந்த செயற்பாடுகளை இடையூறு இல்லாமல் மேற்கொள்ள முடியும்.

உங்கள் பாடசாலையின் கௌரவத்தைப் பாதுகாக்க அனைவரும் செயற்படுதல் அவசியமாகும் எனப் பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார். (நி-8)

## AI தொழில்நுட்பம் குவியும் முறைப்பாடுகள்




(கொழும்பு)

இலங்கையில் ஒரே வயதுடைய சிறுமிகளின் புகைப் படங்கள் எடுக்கப்பட்டு AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதனை தகாத புகைப் படங்களாக மாற்றி பகிரப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்தப் பொருத்தமற்ற செயலை 13 தொடக்கம் 17 வயதுடைய சிறுவர்களே செய்வதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்ட அமுலாக்க இயக்குநர் வழக்கறிஞர் சஜீவனி அபேகோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் பிள்ளைகளின் பெற்றோர் முறைப்பாடு செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனைச் செய்த சிறுவர்களும் பாதிக்கப்பட்ட சிறுமிகளும் ஒரே வயதுடைய நண்பர்கள் என்றும் சுட்டிக்காட்டினார். (நி-8)

## தரமான பொருட்கள் விநியோகம்; ஆதரவு தெரிவித்தது ஜப்பான்

(கொழும்பு)

நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரையும் பாதுகாத்து இலங்கையில் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கை ரீதியான மாற்றங்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு ஜப்பான் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஜப்பான் நியாய வர்த்தக ஆணைக்குழு என்பன இதற்கு ஆதரவளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் குறித்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தகத்தில் நியாயபூர்வமிக்க தன்மையை உருவாக்குவதன் மூலம் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படுவதுடன், இதன் மூலம் நாட்டில் போட்டிமிக்க சந்தை உருவாக்கப்படுகின்றது எனவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாகிஸ்தான் கிரிக்கெட் ஐ.சி.யு-வில் இருக்கிறது அப்ரிடி சீற்றம்







சம்பியன்ஸ் ட்ராபியில் பாகிஸ்தான் அணி ஒரு வெற்றி கூட பெறாமல் லீக் சுற்றுலியே வெளியேறியது அந்நாட்டு முன்னாள் வீரர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இப்போது, அடுத்ததாக நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கு பாகிஸ்தான் அணி தயாராகி வருகிறது. இதில், ரி-20 தொடரில் முகமது ரிஸ்வான், பாபர் அசாம் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டு சல்மான் அகாவை கப்டனாகவும், சதாப் கானை திடீரென அணிக்குள் சேர்த்து துணைக் கப்டனாகவும் நியமித்திருக்கிறார்கள்.

திடீரென சதாப் கானை சேர்த்து, துணைக் கப்டனாக நியமித்ததற்கெதிராக கேள்வியெழுப்பியிருக்கும் முன்னாள் கப்டன் சாகித் அப்ரிடி, தவறான முடிவுகளால் பாகிஸ்தான் கிரிக்கெட் ஐ.சி.யு-வில் இருப்பதாக விமர்சித்திருக்கிறார்.

இது குறித்து பேசிய சாகித் அப்ரிடி, "எதன் அடிப்படையில் சதாப் கான் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார்? உள்நாட்டு கிரிக்கெட்டில் சதாப் கானின் செயற்றிறன் என்ன? அவர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டதன் காரணங்கள் என்ன? நாம் எப்போதும் போட்டிக்குத் தயாராவது குறித்து பேசுகிறோம். தோல்வியடையும்போது அதிலிருந்து மீள்வது பற்றி பேசுகிறோம். ஆனால், உண்மையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தவறான முடிவுகளால் தான் பாகிஸ்தான் கிரிக்கெட் ஐ.சி.யு-வில் இருக்கிறது.

கிரிக்கெட் வாரிய அதிகாரிகளின் வேலைதான் என்ன? தங்களின் இடத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வீரர்கள் மீது பயிற்சியாளர்களும், வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் மீது நிர்வாகமும் பழிபோடுவது வருத்தமளிக்கிறது." என்று கூறினார். (6-8)

# இன்ஸ்டாகிராம் பக்கத்தில் சாதனை படைத்த சி.எஸ்.கே

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 17 மில்லியன் பின்தொடர்பவர்களை பெற்ற முதல் அணி என்ற சாதனையைப் படைத்துள்ளது.

சென்னைக்கு அடுத்தபடியாக 16.3 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் ஆர்.சி.பி அணி இரண்டாவது இடத்திலும், 15.4மில்லியன் பின்தொடர்பவர்களுடன் மும்பை இந்தியன்ஸ் அணி மூன்றாவது இடத்திலும் உள்ளது.

எம்.எஸ் டோனி என்ற பெயர் தான் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் இன்ஸ்டாகிராமில் அதிக பேர் பின்தொடர்வதற்கு காரணம் என்றால் மிகையாகாது. இந்தியா முழுவதும் சென்னை அணிக்கு ரசிகர்கள் இருப்பதற்கும் அவர்தான் காரணம். இதுவரை 5 ஐ.பி.எல் கோப்பைகளை சென்னை அணி வென்றுள்ளது.

இந்நிலையில், 2024 ஐ.பி.எல் தொடரில் சி.எஸ்.கே கப்டன் பதவியில் இருந்து டோனி விலகி, ருதுராஜ் கெய்க்வாட் இடம் கப்டன் பொறுப்பை ஒப்படைத்தார். வரும் ஐ.பி.எல் தொடரில் ருதுராஜ் தலைமையில் சென்னை அணி களமிறங்கவுள்ளது.

எக்ஸ் பக்கத்தில் 10 மில்லியன் பின்தொடர்பவர்களை கடந்த ஒரே அணி என்ற சாதனையையும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தன்வசம் வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)




# 3 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா மாஸ்டர்ஸ் வெற்றி



ராய்பூரில் நடந்த இங்கிலாந்து மாஸ்டர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில், அவுஸ்திரேலியா 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மாஸ்டர்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா மாஸ்டர்ஸ் அணிகள் மோதிய போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

முதலில்ஆடிய இங்கிலாந்து அணியில் மாஸ்டர்ஸ் 17 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, இயான் மோர்கன் மற்றும் ஆம்ப்ரோஸ் ருத்ர தாண்டவம் ஆடினர்.

சிக்ஸர்களை பறக்கவிட்ட அணித் தலைவர் இயான் மோர்கன் 32 பந்துகளில் 5 சிக்ஸர்ஸ், 5 பவுண்டரிகளுடன் 64 ஓட்டங்கள் விளாசினார்.

கடைசிவரை களத்தில் நின்ற ஆம்ப்ரோஸ் 44 பந்துகளில் 2 சிக்ஸர்ஸ், 7 பவுண்டரிகளுடன் 69 ஓட்டங்கள் குவித்தார்.

மேடி 29 (19) ஓட்டங்களும், பிரெஸ்னன் 18 (8) ஓட்டங்களும் விளாச இங்கிலாந்து மாஸ்டர்ஸ் 209 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் களமிறங்கிய அவுஸ்திரேலிய மாஸ்டர்ஸ் அணியில் ஷான் மார்ஷ் 20 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து கைகோர்த்த டேனியல் கிறிஸ்டியன், நாதன் ரியர்டன் கூட்டணி சிக்ஸர் மழை பொழிந்தது. கிறிஸ்டியன் 28 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, நாதன் ரியர்டன் 39 பந்துகளில் 5 சிக்ஸர்ஸ், 9 பவுண்டரிகளுடன் 83 ஓட்டங்கள் விளாசினார்.

பீட்டர் நெவில் 28 (18) ஓட்டங்கள் விளாச, அவுஸ்திரேலிய அணி 19.1 ஓவரில் 210 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

நடப்பு சீசனில் கடைசி போட்டியில் விளையாடிய இங்கிலாந்து ஒரு வெற்றி கூட பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

# போதைப்பொருள் வழக்கில் சிக்கிய கிரிக்கெட் வீரர்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் மெக்கில், சிட்னியில் சட்டவிரோத போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டதாக நியூ சவுத் வேல்ஸ் மாவட்ட நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது.

54 வயதான ஸ்டுவர்ட் மெக்கில், போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டதாக விசாரணையில் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

விசாரணையின் போது 330,000 அவுஸ்திரேலிய டொலர்கள் மதிப்புள்ள கோகைன் பரிமாற்றம் பற்றிய விவரங்கள் வெளிவந்துள்ளன.

மெக்கில் நேரடியாக போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடவில்லை என்றாலும், அதன் விநியோகத்தில் தெரிந்தே பங்கேற்றதற்காக குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து அவருக்கு மே மாதம் தண்டனை விதிக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

ஸ்டுவர்ட் மெக்கில் 44 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 208 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கங்களுக்காக பாடசாலைகளை பயன்படுத்தாதீர்கள்!

## தெளிவுபடுத்திய பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

**பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களில் அரசியல்வாதிகள் கலந்து கொள்வதைத் தடை செய்யும் சட்டம் எதையும் நான் விதிக்கவில்லை. அரசியல் நோக்கங்களுக்காகப் பாடசாலைகளைப் பயன்படுத்துவதை அரசியல்வாதிகள் தவிர்க்க வேண்டும் என பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பிரதமரின் தடையை மீறி ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொள்கிறார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் சானக கூறியதற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல ஒரு பாடசாலை நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார். அப்படியென்றால் ஆளும்கட்சிக்கு ஒரு நியாயம் எதிர்கட்சிக்கு ஒரு நியாயமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என சானக கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் நான் எப்போதும் அவ்வாறு தடை விதிக்கவில்லை. அப்படி எந்த சட்டமும் இல்லை எனத் தெரிவித்தார். (நி-8)




## இராசிபலன்

14.03.2025
மாசி 30, வெள்ளிக்கிழமை
பூரணை பிற்பகல் 12.46 மணிவரை

பூரம் காலை 6.43 மணிவரை
சுபநேரம் 6.21-7.51 மணிவரை
இராகுகாலம் 10.51-12.21 மணிவரை
திருவள்ளுவர் குருபூசை

சந்திராஷ்டமம்
அவிட்டம்.

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தாரது தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** கடவுளை வழிபட்டுக் காரியம் சாதிக்க வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில்நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்.

**ரிஷபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கும்பம்** குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள், விரயங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்கள் மத்தியில் நல்லபெயர் கிடைக்கும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் கூடும், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**தனுசு** குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆலய வழிபாட்டில் அக்கறைகாட்டுவீர்கள்.

**மீனம்** உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**செல்வம் இருப்பு கையில் இருந்தால் எந்த ஊரிலும் வாழலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைக் கந்தனின் மஹா கும்பாபிஷேகம்




(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலய ஸ்ரீ மஹா வல்லி ஸ்ரீ கஜவல்லி சமேத ஸ்ரீ சுப்ரமண்ய பரிவாரத் தெய்வங்களுக்கான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை அதிகாலை 4 மணி முதல் இரவு 11 மணிவரையும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மதியம் 2 மணி முதல் 4 மணிவரையும் அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து மறுநாள் 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8.07 மணி முதல் முற்பகல் 10.09 மணி வரை உள்ள சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறும் என மாவை ஆதீனப் பேரரசு ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ து. ஷ இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்துள்ளார். (6-8)

## குளுக்கோமா வாரத்தினை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி




(யாழ்ப்பாணம்)

உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு நேற்று யாழில் விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.சிவன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான நடைபவனியானது காங்கேசன் துறை வீதியூடாகச் சென்று பின்னர் வைத்தியசாலை வீதியூடாக எஸ்.ரி.எஸ் வைத்தியசாலையை வந்தடைந்ததின் பின்னர் வைத்தியசாலையில் விழிப்புணர்வு செயலமர்வும் இடம் பெற்றது.

குளுக்கோமா நோய் என்பது கண்ணில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இந்த நோயினை ஆரம்பத்தில் இனங்கண்டு சிகிச்சையை பெற்றுக் கொள்வதன் மூலம் நோயில் இருந்து குணமடைய முடியும்.

எனவே இந்த நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நடை பவனி முன்னெடுக்கப்பட்டது.

லயன்ஸ் கழகம் மற்றும் எஸ்.ரி.எஸ் வைத்திய சாலையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8-33)

## 46, 438 பெண்தலைமைத்துவ குடும்பங்கள் யாழில்

### அரச அதிபர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 46 ஆயிரத்து 438பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டம் பெண்கள் தொடர்பாக பல தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளது.

புள்ளிவிபரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் 2இலட்சத்து ஏழாயிரம் குடும்பங்கள் உள்ள நிலையில் அதில் 46 ஆயிரத்து 438பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன.

அந்த அடிப்படையில் மொத்தக் குடும்ப எண்ணிக்கையில் 22சதவிகிதம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகக் காணப்படுகின்றன.யாழ். மாவட்டம் யுத்தத்தின் பின் பல்வேறு வகைகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

யுத்தத்தின் பின்னர் எமது மாவட்டத்தில் 4599 புதிய பெண் தொழில் முயற்சியாளர்கள் உருவாகியுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்குப் பின்னும் பெரும் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி ஆகியன காணப்படுவதாகத் தெரிவித்திருந்தார். (6-8-30)

## உள்ளூராட்சி தேர்தலில் யாழில் ஜே.வி.பி ஆட்சி அமைக்கும்

### கடற்றொழில் அமைச்சர்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான அங்கீகரிக்கப்பட்டவர்களை நியமிக்கும் நடவடிக்கைகளுக்காக நேற்று காலை யாழில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்திற்கு வருகை தந்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயசந்திர மூர்த்தி றஜீவன், சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, தொகுதி அமைப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர். (6-8-33)

## ஈவினை-மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்



(யாழ்ப்பாணம்)

ஈவினை மதுரையம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொட்ர்ந்து மஹோற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் எப்ரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இரதோற்சவமும், 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும், 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவன உற்சவமும் நடைபெற்று 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சண்டி ஹோமம்உற்சவத்துடன்மகோற்சவம் நிறைவடையும் என ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (6-8)

## செயற்பட்டு மகிழ்வோம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி இடைக் குறிச்சி சர்வோதய முன்பள்ளியின் மழலைகள் செயற்பட்டு மகிழ்வோம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய முதல்வர் தி.அபராஜிதன் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8-30)

## குப்பிழான் விவசாயிகள் சம்மேளன பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விவசாயிகள் சம்மேளன மண்டபத்தில் இடம் பெற உள்ளது.

உடுவில் கமநல சேவை உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் 2025 ஆம் ஆண்டுக்கான விவசாய அங்கத்தவர் பதிவும் இடம்பெறும்.

ஒவ்வொருவருக்கும் அங்கத்துவப் படிவம் வழங்கப்பட்டு அவ் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து தரும் ஒழுங்கில் அவர்களுக்கான அங்கத்துவ இலக்கம் வழங்கப்படும். ஒவ்வொரு அங்கத்தவரும் 250 ரூபாய் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

குறித்த கூட்டத்தில் சம்மேளனப் பதிவில் உள்ள சகல விவசாயிகளும் கலந்து கொண்டு மேற்படி தங்களின் விவசாயப் பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு குப்பிழான் விவசாய சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

**உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.**

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

**076 097 3127**

**021 221 7603**

**/ - 076 636 3378**

E.mail: Valampurii@yahoo.com


# அரிசி விலையில் மாற்றமில்லை

## நுகர்வோர் அதிகார சபை

(கொழும்பு)

அரிசிக்காக வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்ட மொத்த மற்றும் அதிகபட்ச சில்லறை விலையில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறி, சில்லறை விற்பனையாளர்கள் சிலர் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக அந்த அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் பச்சை அரிசி 220 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் நாடு அரிசி 230 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 240 ரூபாவாகவும் மற்றும் ஒரு கிலோகிராம் கீரி சம்பா அரிசி 260 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

எனவே அரிசிக்காக விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை தொடர்ந்தும் அமுலில் இருக்குமெனவும் அவற்றில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளவில்லை எனவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (நி-8)


## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



திருமதி

**சியாமளா சிறீதரன்**

(ஆசிரியர், SLTS-I, B.Sc, HNDE, PGDM)

வண்ணமதி முகமாய்
வேலாயுதமதில்
பன்னிரு வருடங்கள் பவனிவந்த
சிந்தை மகிழ் கணித மதை
சீருடன் கற்பித்த
நல்லாசான் நலமுடன் வாழ
மணிவிழா வாழ்த்தினை
மனதார வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம் (11.01.1993-28.02.1993)
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (01.03.1993-10.03.1996)
யா/ஆழியவளை சீ.சீ.த.க பாடசாலை (11.03.1996-31.12.1996)
யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம் (01.01.1997-22.09.1998)
யா/வட இந்து மகளிர் கல்லூரி (23.09.1998-31.12.2006)
யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம் (01.01.2007-27.04.2011)
யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலை (28.04.2011-26.02.2012)
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் (27.02.2012-14.03.2025)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை.

(c-2455)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Driver(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15211

பிறப்பு:1980 இந்து
நட்சத்திரம்:கேட்டை
கி.பா:9
உயரம்:5'5"
தகைமை/தொழில்:A/L, Manager (நெதர்லாந்து)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15212

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 40 3/4
உயரம்:5'10"
தகைமை/தொழில்:A/L, Business (own)
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/15213

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா:35 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BBM, MA
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15218

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 6
2 இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Phamacist (Canada)
எதிர்பார்ப்பு: வெளிநாடு(கனடா)
தொ.இ: G/15220

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 28
8 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA, DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15221

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## சேவை நலன் பாராட்டு



உயர்திரு.

**கணேசபிள்ளை உமாகரன்**

(SLTS-I)

ஆசிரியர் சேவையின் 27 ஆண்டுகளில்
எமது பாடசாலையில் 18 வருடங்களாக
சேவையாற்றி 14.03.2025 இன்று
மணிவிழாக் காணும் எமது பாடசாலை
ஆசிரியரின் சேவையைப் பாராட்டி
கௌரவிப்பதோடு அவரது
ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக
அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கோப்பாய் தெற்கு கந்தவேள்
தமிழ் கலவன் பாடசாலை.

(3632)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறீன்லாந்து பாராளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சியினர் வெற்றி




(டென்மார்க்)

கிறீன்லாந்து பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்தது. அந்த தீவு பிராந்தியத்தில் 31 அமைச்சர்களைத் தேர்வு செய்ய பொதுமக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். தேர்தல் முடிந்து வாக்கெண்ணும் பணி அன்றைய தினம் நிறைவடைந்தது. அதற்கமைய தேர்தலில் அந்த நாட்டின் எதிர்க்கட்சி கூட்டணி 51.4 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது.

ஆளுங்கட்சி கூட்டணி 36.1 சதவீத வாக்குகளைப் பெற்று தோல்வி அடைந்தது. வெற்றி குறித்து எதிர்க்கட்சி தலைவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், முதலில் டென்மார்க்கிடம் இருந்து முழு சுதந்திரம் பெறுவோம். எங்கள் கிறீன்லாந்து மீது ஆர்வம் காட்டுபவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று தெரிவித்தார்.

வடதுருவத்தில் உள்ள உலகின் மிகப்பெரிய தன்னாட்சித் தீவு பிராந்தியமாக கிறீன்லாந்து உள்ளது. 57 ஆயிரம் பேர் மட்டும் வசிக்கும் இதன் 80 சதவீத நிலப்பகுதி பனி சூழ்ந்து வாழத்தகுதி அற்றதாக உள்ளது.

டென்மார்க் கட்டுப்பாட்டுக்குள் சுமார் 300 ஆண்டுகளாக இருந்து வந்த இந்த தீவு, 1953 ஆம் ஆண்டு அந்த நாட்டின் ஒரு பகுதியாக அங்கீகாரம் பெற்றது.

1979ஆம் ஆண்டு பாதுகாப்பு மற்றும் வெளியுறவு கொள்கைகள் தவிர்த்து பிற கொள்கைகளை கவனித்து கொள்ள தன்னாட்சி சுதந்திரம் அளிக்கப்பட்டது. அன்று முதல்கிறீன்லாந்தில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு வருகின்றது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீவுக்கு அருகே ஆர்ட்டிக் பெருங்கடலில் ரஷ்யா மற்றும் சீனா ஆராய்ச்சி மையங்கள் அமைத்துள்ளன. கிறீன்லாந்து பனிப்பாறைகளில் யுரேனியம், இயற்கை எரிவாயு கொட்டி கிடக்கிறது. இதனால் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து கிறீன்லாந்தை வாங்க விருப்புவதாகத் தெரிவித்து வந்தார்.

கடந்த வாரம் அமெரிக்கா பாராளுமன்றக் கூட்டத் தொடரில் ட்ரம்ப் கலந்து கொண்டு பேசினார்.


அப்போது அவர், "தேசிய பாதுகாப்புக்கு கிறீன்லாந்து தேவை. எப்படியாவது நான் அதை அடைந்தே தீருவேன்" எனக்கூறி தனது இலட்சியத்தை வெளிப்படுத்தினார்.

முன்னதாக நீங்கள் விரும்பினால், உங்களை அமெரிக்காவிற்கு வரவேற்கிறோம் எனக் கிறீன்லாந்து நாட்டு மக்களின் ஆசையை ட்ரம்ப் தூண்டிவிட்டார். கிறீன்லாந்து விற்பனைக்கு அல்ல என கிறீன்லாந்து மற்றும் டென்மார்க் அரசாங்கம் பதிலடி கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# என்ன வேண்டுமானா

# பேச்சுவார்த்தைக்கு

## அமெரிக்காவை மிரட்



**(டெஹ்ரான்)**

**அமெரிக்காவுடன்**
**தைக்கு வர முடியாது**
**என்ன வேண்டுமானா**
**கொள்ளட்டும், என ஈர**
**பதி மசூத் பெஷேஷ்கிய**
**துள்ளார்.**

ஈரான் அணுசக்தித் திட்டம் தொடர்பாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தம் போடப்பட்டது. பிறகு அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதும் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தார்.

இதன் பிறகு அந்நாட்டின் மீது பல பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. இருப்பினும், ஈரான் தொடர்ந்து அணுசக்தி தயாரிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் நிருபர்களிடம் பேசிய ட்ரம்ப், "ஈரான் நாட்டுத் தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு கடிதம் எழுதி உள்ளேன். ஈரானை கையாள இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று இராணுவ ரீதியில் கையாள வேண்டும். மற்றொன்று இருநாடும் ஒப்பந்தம் போட வேண்டும். நான் ஒரு

ஒப்பந்
கிறேன்
செய்ய
கூறியிரு
ஈரான்
அலி
பேச்சு
வேண்
முடியா
எது.

ரஷ்
நாள் யு
என உ
ளதைத்
பாதுகா
னாய்வு
வது அ
கட்டுப்ப

ஒரு
காணப்
லிருந்து
புதிய
துள்ளது

வெ
அமெரி
திபதிக
போரில்
அமெரி
களை,
களை
நிறுத்தி

சவுதி
னுடன
ளிற்கு

## உக்ரைனுக்கான உதவிகளை மீண்டும் வழங்கியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

உக்ரைன் 30 நாள் யுத்த நிறுத்தத்திற்கு தயார் என தெரிவித்ததை தொடர்ந்து அந்த நாட்டிற்கான பாதுகாப்பு உதவிகளை வழங்குவதையும் புலனாய்வுத் தகவல்களை பரிமாறுவதையும் அமெரிக்க மீள ஆரம்பித்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னாலும் செய்யட்டும்! ...க்கு வரமுடியாது!

## ...மிரட்டியது ஈரான்



**...வுடன் பேச்சுவார்த் ...யாது. அந் நாடு ...ானாலும் செய்து ...ன ஈரான் ஜனாதி ...ஷ்கியான் தெரிவித்**

ஒப்பந்தம் செய்யவே விரும்புகிறேன். அந்நாட்டிற்கு தீங்கு செய்ய விரும்பவில்லை" எனக் கூறியிருந்தார். இது தொடர்பாக ஈரான் தலைவரான அயதுல்லா அலி கமேனி கூறுகையில், பேச்சு வார்த்தைக்கு வர வேண்டும் என ஈரானை மிரட்ட முடியாது. அவர்களின் பேச்சுவார்த்தையானது பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாக கொண்டிருக்கவில்லை. அவை ஆதிக்கம் செலுத்துவதையே நோக்கமாக கொண்டுள்ளன என தெரிவித்து இருந்தார். இந்நிலையில், ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியான் கூறுகையில், அமெரிக்கா உத்தரவு போடுவதையும், மிரட்டல் விடுப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. உங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியாது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என அவர் தெரிவித்தார். (நி-8)





ளது.

ரஷ்யா உடன்பட்டால் 30 நாள் யுத்த நிறுத்தத்திற்கு தயார் என உக்ரைன் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து அமெரிக்கா பாதுகாப்பு உதவிகளை, புலனாய்வுத் தகவல்களை வழங்குவது ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளது.

ஒரு வாரகாலத்திற்கு முன்னர் காணப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து விலகி ட்ரம்ப் நிர்வாகம் புதிய நிலைப்பாட்டையெடுத்துள்ளது.


வெள்ளை மாளிகையில் அமெரிக்க உக்ரைன் ஜனாதிபதிகள் கடும் வார்த்தைப் போரில் ஈடுபட்டதை தொடர்ந்து அமெரிக்கா பாதுகாப்பு உதவிகளை, புலனாய்வுத் தகவல்களை வழங்குவதை இடைநிறுத்தியிருந்தது.

சவுதி அரேபியாவில் உக்ரைனுடனான பேச்சுவார்த்தைகளிற்கு தலைமைதாங்கிய அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்க்கோ ருபியோ யுத்த நிறுத்தம் குறித்தத் திட்டத்தை அமெரிக்கா ரஷ்யாவிற்கு தெரிவிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மேசையில் என்ன உள்ளது என்பதை அவர்களிற்கு தெரிவிக்கப்போகின்றோம், உக்ரைன் துப்பாக்கிச் சூட்டை நிறுத்திவிட்டு பேச்சு வார்த்தைகளிற்கு தயார், இனி ரஷ்யாவே ஆம் அல்லது இல்லை என தெரிவிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத் திட்டத்தினை ரஷ்யா ஏற்க மறுத்தால் சமாதானத்திற்கான உண்மையான தடை என்னவென்பது தெரியவரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## எல்லாவற்றையும் இழக்க நேரிடும் அமெரிக்காவுக்கு ஐ.நா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

பிற நாடுகளின் மீது வரி விதிக்கும் முடிவால் பாதிப்புத் தான் ஏற்படும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், அமெரிக்காவுக்கு மறைமுக எச்சரிக்கை விடுத்துள்ளார்.


அமெரிக்க ஜனாதிபதியாக 2ஆவது முறையாகப் பொறுப்பேற்றது முதல் ட்ரம்ப், பல்வேறு அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக, சட்டவிரோத குடியேறிகளை தடுக்கத் தவறியதற்காகவும், போதைப் பொருள் கடத்தலை கட்டுப்படுத்தாதற்கும் மெக்சிக்கோ, கனடா மீது தலா 25 சதவீத வரிகளையும், சீனா மீது 10 சதவீத வரியையும் விதித்தார்.

இதற்கு பதிலடியாக, அமெரிக்கா மீது 25 சதவீத வரிகளைக் கனடா விதித்தது. அதேபோல, உலகின் அனைத்து நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் அலுமினியத்துக்கு 25 சதவீதம் கூடுதல் வரி விதிப்பும் நேற்று முதல் அமுலுக்கு வந்தது. ட்ரம்ப்பின் இந்த முடிவால் அதிகம் பாதிக்கப்படும் நாடுகளாக கனடாவும், மெக்சிக்கோவும் தான் உள்ளன. காரணம், அமெரிக்க இரும்பு இறக்குமதியில் கனடா 79 சதவீதமும், அமெரிக்க அலுமினிய இறக்குமதியில் மெக்சிக்கோவும் தான் அதிக பங்கு வகிக்கின்றன.

இந்த நிலையில், உலக நாடுகள் மீது வர்த்தகப் போரைத் தொடுத்தால் அனைத்தையும் இழக்க நேரிடும் என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-8)

## நாசாவின் அதிகாரிகள் பணிநீக்கம்

# ட்ரம்ப் அதிரடி உத்தரவு



(வோஷிங்டன்)

அமெரிக்கா நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாக நாசா உள்ளது. உலகப் புகழ்பெற்ற இந்த நிறுவனத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆராய்ச்சியாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். நாசாவில் வானிலை ஆய்வு மற்றும் பருவக்கால மாறுபாடு நிறுவனத் தலைவராக கேத்ரின் கால்வின் என்ற பெண் ஆராய்ச்சியாளர் பணிபுரிந்து வந்தார்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவி ஏற்றதில் இருந்து அரச அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் பலரை பணி நீக்கம் செய்து வந்தார்.

இந்நிலையில் தற்போது கேத்ரின் கால்வின் உள்ளிட்ட 23 பேரை நாசாவில் இருந்து பணி நீக்கம் செய்ய ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

நாசாவில் வானிலை மாறுபாட்டுத் துறை தேவையில்லாதது என ட்ரம்ப் ஏற்கனவே கூறி வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோயாளிகளில் தினமும் ஐவர் உயிரிழப்பு

## தேசிய சிறுநீரக நோய்த்தடுப்பு மற்றும் ஆய்வுப்பிரிவு

(கொழும்பு)

**இலங்கையில் தினசரி சிறுநீரக நோயாளிகளில் ஐவர் உயிரிழப்பதாகத் தேசிய சிறுநீரக நோய்த்தடுப்பு மற்றும் ஆய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.**



2023 ஆம் ஆண்டின் தரவுகளின் படி, நாட்டில் நாள்பட்ட சிறுநீரக நோய்க்குள்ளானவர்கள் 213,448 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதே ஆண்டில் 1,626 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

2023 - 2024 ஆம் ஆண்டில் டயாலிசிஸ் எனப்படும் கூழ்மப்பிரிப்பு சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை 6,582 ஆக காணப்பட்டது.

மேலும் சிறுநீரக மாற்று சிகிச்சை நோயாளிகளின் எண்ணிக்கை சுமார் 300 ஆக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடமத்திய மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 130-150 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 700 | 600-650 |
| தக்காளி | 160 | 100 | 200 | 130-150 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 200 | 260 | 250-300 |
| கோவா | 300 | 400 | 300 | 250 |
| கரட் | 850 | 1000 | 650-850 | 780 |
| பூசணி | 140 | 150 | 120 | 80-100 |
| புடோல் | 150 | 150 | 150 | 130 |
| வாழைக்காய் | 160 | 120 | 100 | 70-100 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 150 | 100-200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 150 |
| பாகற்காய் | 350 | 500 | 400 | 450 |
| வெண்டக்காய் | 300 | 200 | 250 | 250-300 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 260 | 150 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 350-450 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 |
| பீற்றூட் | 400 | 150 | 150 | 130 |
| கறிமிளகாய் | 160 | 400 | 400 | 300-450 |
| முருங்கைக்காய் | -- | 1500 | 2500 | 2500 |
| போஞ்சி | 450 | 300 | 400 | 350 |
| கத்தரிதம்புள்ள | -- | 150 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 120 | 60-70 |
| தேசிக்காய் | 200 | 100 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 230 | 200 | 250 | 150-250 |
| இராசவள்ளி | 500 | 500 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 150 | 250 | 50-60 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 80 | 100 |
| வல்லாரை | 60 | 80 | 60 | 50 |
| ஈரப்பலா | 100 | 50 | 120 | 100 |

# இன்று ஒரு தகவல் 339



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அறிவா? செல்வமா?

இந்த உலகத்திலே நாம் நல்லபடியாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு முக்கியமாக தேவைப்படுவது இரண்டு!

ஒன்று செல்வம். இன்னொன்று அறிவு. சரி இது இரண்டிலே சிறந்தது எது? என்று ஒரு கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வது?

இதே கேள்வியை ஹஸ்ரத் அலி அவர்களிடம் கேட்டார்களாம். அவர் ஒரு பெரிய அறிஞர். கேள்வி கேட்டவர்களும் சாதாரண ஆட்கள் இல்லை. இவர்களும் அறிஞர்கள்.

ஒருநாள் ஹஸ்ரத் அலியிடம் பத்து அறிஞர்கள் வந்தார்கள்.

ஐயா! நாங்கள் பத்துப்பேரும் உங்களிடம் ஒரே கேள்வியைத் தான் கேட்க வந்திருக்கின்றோம்! ஆனால் எங்கள் பத்துப் பேருக்கும் நீங்கள் தனித்தனியாக பதில் சொல்ல முடியுமா? என்று கேட்டிருக்கிறார்கள். அதாவது அவர்கள் ஒரே கேள்விக்கு இவர்களிடமிருந்து பத்துவிதமான பதிலை எதிர்பார்க்கிறார்கள். சரி கேளுங்கள். என்ன கேள்வி? என்றார் இவர். அப்பதான் அவரிடம் கேட்டார்கள் செல்வம் அறிவு இவை இரண்டிலே சிறந்தது எது? என்று.

ஹஸ்ரத் அலி என்ன செய்தார் தெரியுமா? அவர்களை ஒவ்வொருத்தராக கூப்பிட்டார். ஒவ்வொரு விதமான பதிலைச் சொல்லி அனுப்பினார். முதலிலே ஒருவரைக் கூப்பிட்டார். அறிவு என்பது தீர்க்கதரிசிகள், ஞானிகள், மகான்கள் இவர்களுடைய பரம்பரைச் சொத்து. ஆனால் செல்வமோ கொடுங்கோலரின் ஆயுதம். அதனாலே அறிவுதான் சிறந்தது என்றார். இரண்டாவது ஆளைக் கூப்பிட்டார். உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள்தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அறிவு உங்களை எப்போதும் காப்பாற்றும். ஆகவே அறிவுதான் சிறந்தது என்றார்.

மூன்றாவது ஆளைக் கூப்பிட்டார். செல்வனுக்கு எப்பவும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிஞனுக்கு நண்பர்கள் அதிகம். அதனாலே அறிவுதான் சிறந்தது! என்றார். அடுத்தவரைக் கூப்பிட்டார். செல்வம் அடுத்தவர்களுக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையும்! ஆனால் கல்வியோ அதிகரித்துக்கொண்டே வரும். அறிவுதான் சிறந்தது என்றார்.

இன்னொருத்தரைக் கூப்பிட்டார். அறிவுள்ளவன் எப்பவும் அதை அடுத்தவர்களுக்கு வாரி வழங்கிக்கொண்டே இருப்பான். அதனாலே அவரிடம் தாராளத் தன்மை இருக்கும். ஆனால் செல்வனிடம் கஞ்சத்தனம்தான் இருக்கும் அதனாலே அறிவுதான் சிறந்தது என்றார்.

ஆறாவது நபரைக் கூப்பிட்டார் செல்வத்தை கள்வர்கள் திருடிக் கொண்டு போக முடியும் ஆனால் அறிவைக் கவர முடியாது என்றார்.

ஏழாவது நபரைக் கூப்பிட்டார்.

செல்வம் கால ஓட்டத்திலே அழிந்திடும். ஆனால் அறிவைக் கால ஓட்டம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே அறிவுதான் சிறந்தது என்றார். எட்டாவது ஆளைக் கூப்பிட்டுச் சொன்னார் செல்வத்துக்கு எப்போதும் எல்லை உண்டு. நிறை உண்டு. அளவு உண்டு. கணக்கு உண்டு. ஆனால் அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லை எதுவும் கிடையாது. அதனாலே அதுதான் சிறந்தது என்றார்.

அடுத்தவரைக் கூப்பிட்டார்.செல்வம் உள்ளத்திலே உள் ஒளியை போக்கிவிடும் இருட்டை உண்டாக்கிவிடும். விரிந்த மனப்பான்மையை குறுகலாக்கிவிடும். ஆனால் அறிவு அப்படி இல்லை! இருண்ட உள்ளத்திலே ஒளியைப் பாய்ச்சி அதை விசாலப்படுத்தும் அதுதான் சிறந்தது என்றார்.

கடைசியாகப் பத்தாவது நபரைக் கூப்பிட்டார்.

செல்வம் மனதிலே செருக்கை உண்டாக்கியது. ஆணவத்தை ஏற்படுத்தும் அதனாலே நானே கடவுள் என்று நினைக்கும் அளவுக்கு மனிதனை தாழ்த்திவிடும். ஆனால் அறிவு பணிவையும் பண்பாட்டையும் வளர்க்கும். அதனாலே அறிவுதான் சிறந்தது என்றார்.

ஆக இப்படிப் பத்துப் பேருக்கும் பத்துவிதமான பதில் சொன்னதன் மூலமாக ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவுதான் செல்வத்தை விட சிறந்தது என்பதற்குப் பத்து காரணங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அந்த அறிஞர் பத்துப்பேர் கேட்ட ஒரே கேள்விக்குப் பத்துப் பதிலைச் சொன்னார். எனக்கு வேண்டிய ஒருத்தர் பத்துப் பேர் கேட்ட கேள்விக்கு ஒரே பதிலைச் சொல்லி சமாளித்து விட்டார் சேர். கேள்வி என்ன தெரியுமா?

என்னிடம் வாங்கிய கடனை எப்போது திருப்பி கொடுக்கப் போகிறாய்? இது தான் அந்தப் பத்துப் பேரும் கேட்ட ஒரே கேள்வி.

இந்த மாதம் 26ஆம் திகதி தந்துவிடுகிறேன். அப்படி ஒரே பதிலைச் சொல்லி அவ்வளவு பேரையும் அனுப்பி வைத்துவிட்டார். எல்லோரும் போனதற்குப் அப்புறம் இவரைத் தனியாகக் கூப்பிட்டு அது என்ன சேர் கணக்கு. 26 ஆம் திகதி அன்றைக்கு என்ன அதிசயம் நடக்கப்போகிறது என்று கேட்டார்.

அதிசயம் அன்றைக்கு இல்லை சேர். அதற்கு முதல் நாளே நடக்கப் போகிறது என்றார். விபரமாகச் சொல்லுங்கள் என்றேன்.

வேறு ஒன்றும் இல்லை. 26 ஆம் திகதி தானே எல்லோரையும் வரச் சொல்லி இருக்கிறேன். அதற்கு முதல் நாளே நான் புறப்பட்டு தலைமறைவாகி விடப்போகிறேன் என்றார் மிகவும் பெருமையாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுடைத்து தங்க நகைகள் திருட்டு-இளைஞன் கைது

## இரணைப்பாலையில் சம்பவம்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு இரணைப் பாலைப் பகுதியில் பட்டப் பகலில் வீடு உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு இரணைப் பாலை பகுதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டினை உடைத்து 6,10,000 ரூபாய் பெறுமதியான தங்கநகைகள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த மாதம் 25 ஆம் திகதி அன்று இடம்பெற்றிருந்தது.

அதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பாக புதுக் குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்தே குறித்த திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஏறாவூர், மட்டக்களப்பில் வைத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி அஜித் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

சந்தேகநபர் பருத்தித் துறையினைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்நபரினை நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளது. (6-8-299)

# திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் திருட்டுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வேணாவில் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி அன்று அதிகாலை 2.30 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த இனம் தெரியாத நபர் மிளகாய்துளை தூவிவிட்டு வீட்டிலிருந்த ஆண் ஒருவரின் 5,95,000 ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியை திருடிச் சென்றுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் புதுக் குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்திருந்தார்.

இதனையடுத்து பொலிஸாரின் தொடர் தேடலில் குறித்த திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். ஹேரத் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 34 வயதுடைய குறித்த சந்தேக நபரை விசாரணைகளின் பின் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (6-8-299)

# 'பெண்களை வாழ விடுங்கள்' யாழில் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று யாழில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கத்தின், பௌர்ணமி நாள் செயற்பாட்டுத் தொடர்ச்சியில் பெண்களுக்கு எதிரான அனைத்துச் சுரண்டல்களையும் முடிவுக்கு கொண்டுவர மௌனத்தை கலைப்போம் எனும் தொனிப் பொருளில் மக்கள் கவனயீர்ப்பு செயல்வாதம் முன்னெடுக்கப் பட்டது.

யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பிக் கப்பட்ட கவனயீர்ப்பு போராட்ட பேரணியானது தந்தை செல்வா கலையரங்கு வரை சென்று மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்தது. (நி-6-8-33)

# உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச சபை நடத்தும் உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் விருது வழங்கல் விழாவும் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9.01 மணிக்கு யா/ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் வலி. வடக்கு பிரதேச சபை செயலாளர் சு.சுதர்ஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செ.பிரணவநாதன், மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் திருமதி.தேவந்தினி பாபு, வட மாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் உமாதங்கவேல் (சட்டத்தரணி) யாழ். பிராந்திய அலுவலக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ. ஸ்ரீவர்ணன், வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திருமதி. சிவகெங்கா சுதீஸ்னர் மற்றும் யா/ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் இ. புஸ்பரட்ணம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வாழ்த்துரையினைத் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார். அதே வேளை மாநாட்டில் கருத்துரைகளைத்தகைமைசார்பேச்சாளர்கள் ஆற்றவுள்ளனர். (6-8)



கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தால் க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்கள் இலவசமாக கடந்த வாரம் யாழ்.வலயப் பாடசாலை அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை; இருவர் கைது

## 418 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பு மீட்பு



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு அச்சலங் குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதி அச்சலங்குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து விஷேட புனாய்வு பிரிவினருடன் இணைந்து நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது அச்சலங்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த கோடா 418 லீற்றர், கசிப்பு 60 லீற்றர், 4 வரலும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் வட்டுவாகல் பகுதியைச் சேர்ந்த 22, 19 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அந் நபர்கள் இருவரையும் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இதன்போது தெரிவித்தார். (6-8-299)

# வீதி புனரமைப்பிற்கான ஆரம்ப நிகழ்வு பூநகரியில்



(தருமபுரம்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்லவராஜன் கட்டு சந்தியிலிருந்து கிராஞ்சி பொன்னாவெளி வரை 12 கிலோ மீற்றர் தூரமான வீதி புனரமைப்பு பணிக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

குறித்த ஆரம்ப நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரி.பாஸ்கரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 1412 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 724





"இல்லாவிடில் இந்தப் பெண் வானதி எதற்காக உன்னைத் தூண் மறைவிலிருந்து கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள்? அதோ அந்தப் படகில் சேந்தன் அமுதன் பூங்குழலியை ஏன் கண் கொட்டாமல் பார்த்துப் பரவசமடைந்து கொண்டிருக்கிறான்?"

இளவரசன் புன்னகை புரிந்து, "அக்கா! நீ எதிலிருந்தோ எதற்கோ போய் விட்டாய்! என் பெரியன்னை என்னிடம் வைத்துள்ள அன்பைக் குறித்துச் சொன்னேன். அது போனால் போகட்டும். இவ்வுலகில் ஒருவரைப்போல் இன்னொருவர் தத்ரூபமாக இருப்பதென்பது சாத்தியமா, அக்கா?"

"ஏன் சாத்தியமில்லை? இரட்டைப் பிள்ளைகளாயிருந்தால் அது சாத்தியம், அல்லது தாயும் மகளும் ஒரு பிராயத்தில் ஒரே மாதிரி இருப்பது சாத்தியம்தான். இதைத் தவிர பிரம்ம சிருஷ்டியில் ஒருவருக்கொருவர் சம்பந்தமேயில்லாதவர்கள். அபூர்வமாகச் சில சமயம் ஒரே மாதிரி இருப்பதும் உண்டு."

"பழுவூர் இளையராணியும், இலங்கையில் நான் பார்த்த நம் பெரியன்னையும் ஒரே மாதிரி இருப்பதாக வந்தியத்தேவர் சொல்வது உண்மையாயிருக்க முடியுமா? நந்தினி சிறு பெண்ணாயிருந்த போதுதான் நான் பார்த்திருக்கிறேன். பழுவூர் இளையராணியான பிறகு நன்றாய்ப் பார்த்ததில்லை. உனக்கு என்ன தோன்றுகிறது?"

"நான் பழுவூர் ராணியைப் பார்த்திருக்கிறேனே தவிர, நம் பெரியம்மாவைப் பார்த்ததில்லை. ஆனால் வந்தியத்தேவர் கூறியது உண்மையாகத்தான் இருக்கவேண்டும். என் தந்தை கூறிய வரலாற்றிலிருந்து அதைத் தெரிந்து கொண்டேன் தம்பி!"

"தந்தையே கூறினாரா உன்னிடம்? என்ன கூறினார்? எப்போது கூறினார்?"

"சில நாட்களுக்கு முன்பு நானும் வானதியும் தஞ்சைக்குப் போயிருந்தோம். அப்போது தம் இளம் பிராயத்தில் நடந்த சம்பவத்தைக் கூறினார். இலங்கைக்கு அருகில் உள்ள ஒரு தீவில் தாம் தனியாக ஒதுக்கப்பட்டதையும், அத்தீவில் ஒரு ஊமைப் பெண் தம்மிடம் காட்டிய அன்பைப் பற்றியும் கூறினார். பராந்தகர் அனுப்பிய ஆட்கள் தம்மை அத்தீவில் கண்டுபிடித்து அழைத்து வந்ததைப் பற்றிச் சொன்னார். தமக்கு இளவரசுப் பட்டம் சூட்டிய அன்று அரண்மனையின் வாசலில் நின்ற கூட்டத்தில் அவளைப் பார்த்தாராம். அடுத்த கணம் அவள் மறைந்துவிட்டாளாம். அவளைத் தேடி அழைத்துவர முதன் மந்திரி அநிருத்தரையே அனுப்பினாராம்.

ஆனால் அந்தப் பெண் கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து கடலில் குதித்து இறந்து விட்டாள் என்று அநிருத்தர் வந்து கூறினாராம். இந்தச் சம்பவம் நம் தந்தையின் உள்ளத்தில் இருபத்து நாலு வருடங்களாக இருந்து அல்லும் பகலும் வேதனை அளித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்தேன். அவள் இறந்துவிட்டதாகவே தந்தை நினைத்துக் கொண்டிருக்கிறார். தம்மால், தமது குற்றத்தால், அவள் மனம் புண்பட்டு உயிரை விட்டுவிட்டதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஆறுவது சினம்



மருங்காபுரி என்ற நாட்டை மகேந்திர வர்மன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். மன்னர் மகேந்திரவர்மனுக்கு ஆதங்கன் என்பவர் முக்கிய மந்திரியாக இருந்தார்.

ஒருநாள் மன்னரும் மந்திரியாரும் அரண்மனை உப்பரிகையில் இரவு நேரத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள். உப்பரிகையின் உள்ளேயிருக்கின்ற கண்ணாடிக் கதவின் வெளிச்சமானது எல்லா இடத்திலும் பிரகாசமாகத் தெரிந்தது.

அதனைக் கவனித்த மன்னர் "மந்திரியாரே ! இந்தக் கண்ணாடிகள் எல்லாம் விசித்திரமாக ஒளியைப் பரப்புகின்றதை கவனித்தீர்களா?" என்று கேட்டார்.

அதனைக் கேட்ட மந்திரி "அரசே' இந்தக் கண்ணாடிகள் ஒன்றும் விசித்திரமான ஒளியைப் பரப்பவில்லை. நிலவின் ஒளியானது இந்தக் கண்ணாடிகளின் மீது படுவதால் தங்களின் பார்வைக்கு கண்ணாடியிலிருந்து ஒளி வீசுவது போன்று தெரிகிறது" என்றார்.

மந்திரியாரின் இந்தப் பதில் மன்னரை ஆத்திரமடையச் செய்தது. கோபத்துடன் மந்திரியைப் பார்த்த மன்னர் "மந்திரியாரே! என் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசிய உம்மை என்ன செய்கின்றேன் பாரும்" என்று கோபமாகக் கூறியவாறு தளபதியாரை அழைத்து மந்திரியின் தலையை வெட்டி எடுத்து கழுகுகளுக்கு இரையாகப் போடும் படி உத்தரவு இட்டார்.

தளபதியாரும் மன்னரின் கட்டளையை நிறைவேற்ற வேண்டி மந்திரியாரை அங்கிருந்து அழைத்துச் சென்றார்.

சிறிது நாட்கள் சென்றதும் பக்கத்து நாட்டு மன்னன் மருங்காபுரி நாட்டின் மீது எந்தவித முன் அறிவிப்பும் இன்றி படையெடுத்து சூழ்ந்து கொண்டான். பக்கத்து நாட்டு மன்னனின் படை பலத்தை நன்கு உணர்ந்த மன்னர் அவனை எப்படி எதிர்ப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தார். அந்த நேரம் மன்னரைத் தேடிவந்த தளபதியார் "அரசே நாம் நம் நாட்டில் மலை எல்லையை கடந்து பின்புறமாகச் சென்று எதிரி நாட்டு எதிரிகளின் மீது திடீர் தாக்குதல் நடத்தினால் போரில் வெற்றி பெற்று விடலாம்" என்று கூறினார்.

தளபதியாரின் ஆலோசனையைக் கேட்ட மன்னரும் அவ்வாறு சென்று, தனக்கு வெற்றி வாய்ப்பைத் தேடிக் கொண்டார். தனக்கு ஆலோசனை வழங்கிய தளபதியாருக்கு பரிசுகள் கொடுத்து கௌரவித்தார்.

சில நாட்களுக்குப் பின் நாட்டில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. குடிமக்கள் எல்லாம் குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அந்த நேரம் மன்னர் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது எண்ணம், சொல், செயல் மூன்றும் சமமாய் இருக்கும் போது நமது நேர்மையை மற்றவர் உணர்வர். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தலுக்கு முன்னைய கூட்டும் தேர்தலுக்கு பின்னைய கூட்டும்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு வெளியாகிய கையோடு கட்டுப் பணம் செலுத்துகின்ற நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

அதேநேரம் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் வேட்பாளர்களைத் தெரிவு செய்கின்ற பணிகளும் களை கட்டியுள்ளன.

வழமையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சிகளைக் கடந்து அந்தந்த வட்டாரங்களில் போட்டியிடுகின்றவர்களின் முகங்களே முன்னிலை பெற்றிருக்கும்.

அதாவது கட்சி என்பதற்கு அப்பால், குறித்த ஊரில் குறித்த வட்டாரத்தில் போட்டியிடுகின்றவர் அந்த ஊரில் கொண்டுள்ள ஈடுபாடும் அவருக்கு மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய செல்வாக்கும் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும்.

பொதுவில் உள்ளூராட்சி சபைகளை எந்தக் கட்சிகள் அதிகம் கைப்பற்றுகின்றனவோ, அந்தக் கட்சிகளே பொதுத் தேர்தலிலும் வெற்றி வாகை சூடுகின்ற நிலைமை இருந்து வந்துள்ளது.

இதன் காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நினைப்பு அனைத்துக் கட்சிகளிடமும் இருப்பது இயல்பே.

இஃது ஒருபுறமிருக்க, கடந்த பொதுத் தேர்தலில் வட மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்திருந்தன. அதாவது வடமாகாணத்தில் ஆளும் தேசிய மக்கள் சக்தி எதிர்பாராத வெற்றியைப் பெற்றிருந்தது. இவ்வாறான தொரு தீர்ப்பை தமிழ் மக்கள் மிகவும் அமைதியாக வழங்கினர்.

இங்கு தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பு சரியானதா? என்ற கேள்விக்கு அறவே இடமில்லாமல் போக, தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படாமையே இவ்வாறானதொரு நிலைமைக்குக் காரணம் என்ற முடிவு ஏற்றுக் கொள்ளப் பட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவந்தபோது, தமிழ்க் கட்சிகளிடையேயான ஒற்றுமை என்ற விடயம் மீளவும் பிரஸ்தாபிக்கப்படலாயிற்று.

ஆம், கடந்த பொதுத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலிலேனும் தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்றால், அதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்துப் போவதாக இல்லை.

அதாவது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சிச் செல்வாக்கு என்பதற்கு அப்பால், தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் செல்வாக்கே முதன்மை பெறும் என்பதால், கட்சிகளின் ஒற்றுமைக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் களம் சாதகமாக அமையவில்லை எனலாம்.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்களின் பொதுப் பார்வையில், தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாடு உள்ளது.

இதற்கு அமைய சில தமிழ்க் கட்சிகள் தேர்தலுக்கு முன்னதாக ஒற்றுமைப்பட்டுள்ளன.

இன்னும் சில கட்சிகள் தேர்தலுக்குப் பின்னர் ஒற்றுமைப்படுவோம் எனக் கூறியுள்ளன.

இவ்வாறு கூறுவதற்குக் காரணம் தமக்குக் கிடைக்கக்கூடிய வெற்றியை இன்னொருவருக்கு விட்டுக்கொடுக்க தமிழ் அரசியல் கட்சிகள் தயாரில்லை என்பதேயாகும்.

# இலங்கைத் தமிழரசுக்கட்சியை பிளவுபடுத்த பல்வேறு சதிகள்

## ●●●●பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ●●●●

*(யாழ்ப்பாணம்)*

இலங்கைத் தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்த பல்வேறு விதமான சதிகள் முன்னெடுக்கப்படுவதாகத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழரசுக் கட்சிக்கு எதிராக பல்வேறு சதி வலைகள் பின்னப்படுகிறது. அதிலும் தமிழரசுக்கட்சியை எப்படியாவது சிதைத்து அதனை உடைத்து கட்சியை பிளவுபடுத்தி விட வேண்டுமென சிலர் செயற்படுகின்றனர்.

இந்த அடிப்படையில் புதிய தமிழரசுக் கட்சி உருவாக்கம் குறித்து பேசப்படுகிறது. உண்மையில் அப்படியாக கட்சிக்குள் இருப்பவர்கள் யாரும் கருதவில்லை.

அப்படியான எண்ணங்கள் கூட அவர்களிடத்தே இல்லை. ஏனெனில் கட்சியில் பலருடனும் இது தொடர்பில் பேசியிருந்த போது அவர்கள்அனைவரும்இதனை மறுதலித்துள்ளனர்.

குறிப்பாக தமிழ் மக்களின் நீண்டகால பாரம்பரியக் கட்சியாக இருக்கின்ற இந்தத் தமிழரசுக் கட்சியை எப்படியாவது உடைத்துவிட வேண்டுமென விசமத்தனமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகிறது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் கடந்த 75 வருடகால வரலாற்றில் சோரம் போகாத ஊழலில் ஈடுபடாத தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியாக இந்தக் கட்சியே திகழ்ந்து வருகிறது.

இத்தகைய கட்சியை உடைக்க பலரும் பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்திருந்தாலும் இது பலனளிக்காத நிலைமையே ஏற்பட்டு உள்ளது.

இவ்வாறான நிலைமையில் ஜனநாயக தமிழரசு என்றும் புதிய தமிழரசு என்றும் புதிய புதிய பெயர்களைச் சொல்லிக் கொள்கின்றனர். அவ்வாறாக தமிழரசை உடைப்பவர்களுக்கு தமிழரசு என்ற சொல்லும் தேவைப்படுவது ஆச்சரியமானது.

ஆக மொத்தத்தில் தமிழரசை உடைக்கும் முயற்சி ஒருபோதும் நிறைவேறாது. ஆனாலும் தெற்கத்தேயே சிங்கள நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் உடைக்கும் முயற்சியை தொடர்ந்தும் செய்தாலும் இது பலனளிக்காது என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

மேலும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக நானும் பதில் செயலாளராக சுமந்திரனும் பதவிக்கு வருவதற்குப் புதிதாக ஒன்றும் செய்யவில்லை. யாப்பில் குளறுபடி செய்து இந்தப் பதவிகளுக்கு வரவில்லை.

எமது கட்சியின் யாப்பிற்கமைய தான் இப்போது அந்தப் பதவிகளை எடுத்திருக்கிறோம் என்றார். *(ம-7,33)*

## 50 ஆயிரம் புரோஸ்மைட் ஊசி இந்திய அரசால் அன்பளிப்பு

அரசாங்கத்தின் அவசர கோரிக்கையை ஏற்று மருத்துவமனைகளில் நிலவும் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதற்காக, இந்திய அரசாங்கம் 50 ஆயிரம் புரோஸ்மைட் ஊசி மருந்துகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று வியாழக்கிழமை (13) சுகாதார அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் அவற்றை ஒப்படைத்தார்.

சுகாதாரத்துறை உட்பட பல்வேறு துறைகளில் நெருக்கடிகள் ஏற்பட்ட காலங்களில் இந்தியா இலங்கைக்கு நம்பகமான நண்பராகவும் முதலில் பதிலளிப்பவராகவும் இருந்து வருகிறது. கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் 2020 மே மாதத்தில் சிறப்பு விமானம்மூலம் இந்தியா 25 தொன்களுக்கும் அதிகமான மருந்துகளை இலங்கைக்கு வழங்கியது.

அது மாத்திரமின்றி சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறைக்காக பல்வேறு ஒத்துழைப்புக்களை இந்தியா வழங்கியுள்ளதாகக் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. *(ம-7)*

## சிவனொளிபாதமலையில் போதைப்பொருளுடன் 14 சந்தேக நபர்கள் கைது

பல்வேறு வகையான போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சிவனொளிபாதமலை யாத்திரையில் கலந்து கொண்டிருந்த 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பொலிஸாரினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள 14 சந்தேக நபர்களும், 25 முதல் 35 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை ஹட்டன் நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். *(ம-7)*

## இராணுவத்திலிருந்து தப்பித்த 20 பேர் கைது

*(கண்டி)*

இராணுவ முகாம்களில் இருந்து தப்பிச் சென்ற 20 இராணுவ வீரர்கள் கண்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்களான இராணுவ வீரர்கள் கண்டி, கட்டுகஸ்தோட்டை மற்றும் அலவத்துகொடை ஆகிய பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இராணுவ வீரர்கள் கண்டிப் பிரதேசத்தில் பல்வேறு தொழில்களில் பணிபுரிந்து வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். *(ம-7)*

## பண மோசடி ■■■■■ கொழும்பில் ஒருவர் கைது

65 மில்லியன் ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டில் கொழும்பைச் சேர்ந்த 51 வயதுடைய நபர் ஒருவரை கொழும்பு குற்றப்பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - 05 ல் வசிக்கும் குறித்த நபர் வணிக நடவடிக்கைகளுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் பணத்தைப் பெற்றுள்ளார்.

விசாரணைகளில் அந்த நபர் 3 கோடி 2 இலட்சம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்ததாகவும் ஆனால் மீதமுள்ள 3 கோடி 48 இலட்சம் ரூபாயைத் திருப்பிக் கொடுக்காமல் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். *(ம-7)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வேலை நிறுத்தம் நிறைவடைந்தது

(கொழும்பு)

பெண் மருத்துவர் மீதான பாலியல் வன்புணர்வுக்கு எதிராக, நாடு முழுவதும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடங்கிய அடையாள வேலைநிறுத்தம் நேற்றுக் காலை 8 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

எனினும், முக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்ட போதிலும், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள், வைத்தியசாலை ஊழியர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கக் கோரி, தங்கள் வேலைநிறுத்தத்தைத் தொடர முடிவு செய்துள்ளனர். வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவுடன் நடைபெறும் கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, வேலை நிறுத்தத்தைத் தொடரலாமா வேண்டாமா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அநுராதபுரம் கிளையின் செயலாளர் வைத்தியர் சசிக விஜேநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மருத்துவ சமூகத்தினரிடையே பரவலான சீற்றத்தைத் தூண்டியுள்ளது.

மேலும் வைத்தியசாலை வளாகங்களுக்குள் வலுவான பாதுகாப்பு நெறிமுறைகளை செயற்படுத்துமாறு சுகாதாரப் பணியாளர்கள் அதிகாரிகளை வலியுறுத்தி வருகின்றனர். (நி-8)

# இந்த ஆண்டில் இதுவரை 563,427 சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வருகை

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில், 563,427 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த மாதத்தின் கடந்த 9 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 70,449 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர். இந்தியாவிலிருந்து நாட்டுக்குப் பிரவேசித்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10,523 ஆகப் பதிவாகியுள்ளதுடன் ரஷ்யாவில் இருந்து 9,475 பேரும், ஜேர்மனியில் இருந்து 6,626 பேரும், பிரித்தானியாவில் இருந்து 6,580 பேரும் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)

# ஐ.ம.சக்திக்கு கால அவகாசம் விதித்த ஐ.தே.கட்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கிடையிலான இணக்கப்பாட்டுடன் சுயாதீன சின்னமொன்றில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் களமிறங்க முடியும். அந்த தீர்மானத்தை எட்டுவதற்கு 15ஆம் திகதி வரை எவ்வித தடையும் இல்லை. அவ்வாறில்லையெனில் யானை சின்னத்தில் தனித்து களமிறங்குவோம் என ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தாவில் தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிந்தளவு முயற்சித்தார். இணக்கப்பாடு எட்டப்பட்டு யானை சின்னத்தில் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

அடுத்த தெரிவு ஏதேனுமொரு உள்ளூராட்சி மன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியாகவோ, ஐக்கிய மக்கள் சக்தியாகவோ அன்றி சுயாதீன சின்னமொன்றில் போட்டியிடுவதாகும். 15 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை அதற்கு எந்தத் தடையும் இல்லை என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

ஒரேயொரு ஆசனத்தை மாத்திரம் ஐ.தே.க பாராளுமன்றத்தில் பெற்றுக் கொண்ட போது நாம் அழிந்து விட்டதாக சிலர் எண்ணினர். ஆனால் அந்த ஒரு ஆசனமே இலங்கையின் 8ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியை தெரிவு செய்தது. எனவே தற்போது ஒரு ஆசனம் கூட இல்லை என நாம் சோர்வடைந்து விடக் கூடாது.

ஒரு ஆசனம் கூட இல்லாமலும் ஜனாதிபதியாகலாம். ஐ.தே.க பலம் மிக்கது என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. மேற்குறிப்பிட்ட 3 யோசனைகளுக்கும் இணக்கம் தெரிவிக்கப்படாவிட்டால் இறுதியாக யானை சின்னத்தில் நாம் களமிறங்குவோம். அதிலும் எமக்கு இலாபமுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3313

### யதுஸ்ரன்





### கவிராஜ்





### யுவதேகி




### மிதுனா




### கதிர்




### நிதுஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

சாலையின் முன்னாள் உதவி அத்தியட்சகர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் அவர் தமது வீட்டு முற்றத்தில் இருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

09 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

## கச்சதீவு...

நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

கச்சதீவுக்கான படகுச் சேவையானது குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து இன்று வெள்ளிக்கிழமை காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகாட்டுவானில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகுக்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.1300 ஆகும்.

கச்சதீவுக்கு குழுவாக / தனியாக வருகை தரும் மக்கள் அவர்களது முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வயது, பால்நிலை மற்றும் அவர்கள் பயணிக்கும் படகு இலக்கம், படகின் வகை, படகோட்டியின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை இரண்டு பிரதிகளில் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ம-7)

## பாதுகாப்புக்...

சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி இரவு நேரத்தில் ஏற்படுகின்ற விபத்துகள் மற்றும் உயிரிழப்புக்களுடன் தொடர்புடைய கடமைகளிலிருந்து விலகுவதாக அறிவித்து பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றையும் கிராம சேவகர்கள் சங்கம் அனுப்பியுள்ளது.

பாதுகாப்பற்ற மற்றும் மக்கள் வசிக்காத பகுதிகளில் உள்ள அலுவலகங்களை மூடுதல், ஒருவரின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட இடத்திலிருந்து அலுவலகப் பணிகளை மேற்கொள்வது மற்றும் நண்பகல் ஒரு மணிவரை மட்டுமே அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுவது போன்ற நோக்கங்களை கொண்டு இத்தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பாக தீர்வுகள் கிடைக்கும் வரை தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை கிராம சேவகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## வேட்புமனுக்கள்...

நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குக் குறைந்தபட்சம் 35 நாட்கள் வழங்கப்படும்.

இதற்கமைய வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கை நிறைவடைந்த நாளிலிருந்து 35 அல்லது 49 நாட்களுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## சந்தேக நபரை...

செய்யுமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

34 வயதுடைய பிரதான சந்தேக நபர், அநுராதபுரம் பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## தையிட்டி...

கரித்து கட்டியுள்ள நிலையில் காணி உரிமையாளர்களாலும் பொதுமக்களாலும் அரசியல் பிரதிநிதிகளாலும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றமை வழமை. அந்தவகையில் நேற்றைய தினமும் போராட்டம் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்.ஐங்கரநேசன், காணியின் உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

## ஐஸ் போதையுடன்...

செய்யப்பட்டுள்ளார்.

வீதியில் பயணித்த கப்ரக வாகனத்தைச் சோதனை செய்தபோது 5 கிராம் 720 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கப்ரக வாகனம் பறிமுதல் செய்யப்பட்டதோடு அதனைப் பயன்படுத்திய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார். (ம-7,316)

## நாட்டின்...

பதை அரசாங்கம் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பொருளாதார ரீதியில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். 75ஆண்டு கால அரசியலை சாபம் என்று விமர்சிக்கும் ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பினர்கள் இலவசக் கல்வியையும், இலவச சுகாதார சேவையையும் பெற்றுக் கொண்டதை மறக்கக்கூடாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகள் நாட்டுக்கு பொருத்தமற்றவை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் அழுத்தமாகக் குறிப்பிட்டார். [illegible] ஆட்சியுடன் அதே கொள்கைகளையே அமுல்படுத்தியுள்ளார். ஆகவே அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை எத்தன்மையானது என்பதை ஆட்சியாளர்கள் எடுத்துரைக்க வேண்டும்.

தேசபந்து தென்னகோனை பொலிஸார் நாடு முழுவதும் தேடுகின்றனர். நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் பொலிஸார் சிவில் உடையில் அரசியல்வாதிகளின் வீடுகளைச் சோதனை செய்கிறார்கள். பொலிஸ் திணைக்களம் சுயாதீனமாகச் செயற்படுகிறதா என்பது கேள்விக்குறியாகக் காணப்படுகிறது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் போட்டியிடுவோம். பெரும்பாலான தொகுதிகளை நாங்கள் கைப்பற்றுவோம். உள்ளூராட்சிமன்ற அதிகாரத்தில் இருந்து முழுமையாக அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்றார். (ம-7)

மஹஜன சம்பத — திகதி 2025.03.13 — சீட்டிழுப்பு இலக்கம் 5774 — D 9 9 9 3 0 8
அத சம்பத — D 9 3 0 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0349
தன நிதானய — திகதி 2025.03.13 — சீட்டிழுப்பு இலக்கம் 1804 — J 03 09 19 26 J — Double Chance 51294
மெகா பவர் — திகதி 13/03/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2122 — Z 13 11 20 21 66
ஜய — திகதி 2025.03.13 — சீட்டிழுப்பு இலக்கம் 042 — Z 5 2 7 7
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4016 — சீட்டிழுப்பு திகதி 13.03.2025 — G 12 57 61 62 — G
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.03.13 — சீட்டிழுப்பு இலக்கம் 1083 — சிம்மம் 08 20 60 62 சிம்மம் — 12298 — 22
உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 13.03.2025 — வெற்றி வாரம் 482 — N 2 1 0 2 0 2 — 67945 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,421,942.80
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2748 — 2025.03.13 — வியாழக்கிழமை — 03 29 43 69 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,925,870.40
சனிதா — 13.03.2025 — வெற்றி வாரம் 4909 — 09 19 62 63 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,697,524.00 — 63113
சசிரி — வெற்றி வாரம் 641 — 13.03.2025 வியாழக்கிழமை — 04 20 28 — ரூ.200,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4460 — 13.03.2025 — வியாழக்கிழமை — 42 48 59 62 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,687,126.00 — 244188
கப்ருக — 1924 — 13.03.2025 — Q 33 11 23 50 58 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.568,327,039.20
அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2574 — 2025.03.13 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,341,217.60 — 19 33 36 50 G — 780882

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
05 - 05 - 1937

மறைவு
11 - 03 - 2025

## திருமதி அருந்தவம் கருணகடாச்சகுரு

மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறையைப் பிறப்பிடமாகவும் திருச்சி இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவம் கருண கடாச்சகுரு அவர்கள் (11.03.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் கருணகடாச்சகுரு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற பூரணப்பிள்ளையின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான கணேசநாதன், கயிலைநாதன், கருணாநிதி, இரத்தினசோதி மற்றும் அருணகிரிநாதன், பழனிநாதன், பவளநாதன், சோதிசொரூபம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமலர், ரஞ்சனாதேவி, அன்ரனி யோசப், சண்முகவடிவு, குணலக்ஷ்மி, சித்திரா, பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் உதயதாரகை, உதயசாந்தி, உதயபிரபா, உதயஜெகதா, உதயவகிதா, தனகலா, தனஅருண், தனஜெகன், தனரோகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாதம், சண்முகராஜா, பத்மராஜா, குமரகுருபரன், தமயந்தி, பாஸ்கர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் குலோத்துங்கன், உமா, மதன், செல்வசாந்தி, தனுசன், மரியா, சூர்யா, தனராஜி, திவான், ஹங், தமயந்தி, துவாரகா, சரண், சாருஜா, யோசுவா, ஜெசிக்கா, அபிஷேக், தக்ஷன், லிதுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சஞ்சய், சஞ்சித், யஷ்வின், ராகுல், ரியா, நேகா , தியா, ஷான், லியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை திருச்சிராப்பள்ளி, இந்தியாவில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(924)


## ஓடுகள் விற்பனைக்கு

ஊர்காவற்துறை
புனித மரியாள் ஆலயத்தில்
பாவித்த நல்ல நிலையிலுள்ள
ஓடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 941 9643

(C-2456)

## வேலைக்கு ஆட்கள் தேவை

பெண் அலுவலக உதவியாளர்
தேவை.
தொடர்புகளுக்கு :
108, Palaly Rd, Jaffna.
077 592 5088
076 997 8857

(3141)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கச்சேரி, நல்லூர் வீதி கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் வீட்டுடன் காணி விற்பனைக்கு. 1 பெரிய விறாந்தை, 4 அறைகள் (1 சமையலறை, இணைந்த குளியலறை), தனியான குளியலறை, சமையலறையும் உண்டு. மாபிள் பதிக்கப்பட்டது. புதிதாக பெயின்ரிங் செய்யப்பட்டது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

074 1475 457
076 2575 750(watsapp only)

(3655)

## இப்பொழுது விற்பனையில்....

யுனிலங்காஸ் வெளியீடு

இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில் தரம் 01 முதல் 05 வரையான மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

இலவச இணைப்பாக சிறுவர் சஞ்சிகையுடன்




யாழ் எக்ஸ்பிரஸ்
YARL EXPRESS




முதலாம் தவணை
மாதிரி பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்

Rs. 260/-

வெளியீடு : UNILANKA'S PUBLICATION,
No. 326, Sea Street, Colombo 11.
Tel : 011 4014438 Hotline : 077 6258778
Whatsapp : 077 6258778 / 0777220324

(C-2457)


# மரண அறிவித்தல்



## செல்வி சுகன்யா ஸ்ரீரங்கநாதன்

மலர்வு
1986.01.18

உதிர்வு
2025.03.11

இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுகன்யா ஸ்ரீரங்கநாதன் அவர்கள் கடந்த 11.03.2025 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதன் - இரத்தினேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் யசோதரன், கமலதர்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (15.03.2025) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் செல்வம் மில் வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக வல்லை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செல்வம் மில் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல் :
குடும்பத்தினர்

(C-2453)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.